**காயல்பட்டிணம்** நகராட்சியின் 10.12.2021ம் தேதிய**அவசரக்கூட்டம்**

**மன்றப் பொருள் 1**

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பமின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016**(Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016)**விதி 5, துணை விதி (1) ன் மூலம் காயல்பட்டிணம் நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக **(Electronic Service Delivery System)**அமைப்பின் கீழ்**https://tnurbanepay.tn.gov.in/**என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| **வரிசை எண்** | **மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர்** | | | **சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்  அதிகாரி** |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | புதிய குடிநீர்இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கானவிண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | |
| | | ii | குடிநீர்இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial) | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | |
| | | v | தொழிற்சாலை பயன்பாடுபாதாளசாக்கடைஇணைப்புக்கானதடையின்மைசான்று<br>NOC for UGD Connection for Industrial | |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitary Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | கட்டிட அனுமதி<br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress | |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story | |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | |
| | | iv | மனைப்பிரிவுஅங்கீகாரகட்டணம்<br>Layout Approval Payment | |
| | | v | மனைப்பிரிவுஅங்கீகாரம்கோருதல்<br>Layout Approval Request | |
| | | vi | வேலை தொடங்குவதற்கானஅறிவிப்பு<br>Notice for Commencement Work | |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | |
| | | viii | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமகட்டணம்<br>Planning Permission with Building License Payment | |
| | | ix | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below12 mts) | |
| | | x | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுரஅடிக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 Sq.ft) | |
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professionals/Developers | |
| | | xii | தொழில் வல்லுநர்/டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு<br>Registration of Professional/Developers Certificate | |
| | | xiii | கட்டிடவரைபடம்புதுப்பித்தல்கோரிக்கை<br>Renewal Building Plan Request | |
| | | xiv | கட்டிடவரைபடம்புதுப்பித்தல்கட்டணம்<br>Renewal Building Plan Payment | |
| | | xv | தொழில் வல்லுநர்கள்/டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம்பதிவு - தேடல்<br>Trade Registration – Search | |
| | | ii | தொழில் உரிமம்புதுப்பித்தல் - தேடல்<br>Trade Renewal - Search | |
| 6 | சொத்து வரி<br>Property Tax | i | வரிவிதிப்புமுழுவிவரம்<br>View Assessment History | |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண<br>View Assessment | |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | |
| | | ii | தொழில்வரிவிதிப்புக்கான கோரிக்கைமீள சமர்ப்பிப்பு<br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br>My Certificate | |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment | |

அலுவலகக்குறிப்பு :-

1. மேற்படி அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியிடாக வெளியிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி அறிவிக்கையினை வெளியிட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 10000/—ற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.2192 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண். 97/2019/ அ1

**காயல்பட்டணம் நகராட்சி 24.12.2021 தேதிய மாதம் சாதாரண கூட்டம்**

**மன்றப்பொருள் I**

காயல்பட்டினம் நகராட்சியின் இந்நகர்மன்ற அனுமதி எண்.2173 நாள்:30.11.2021ன்படி அனுமதிக்கப்பட்டு 21.12.2021 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இனங்களில் வ.எண் 2,3,4,5,7,8 ஆகிய குத்தகை இனங்கள் ஏலக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அவற்றில் கூடுதல் ஏலக் கேள்வி கோரிய

ஏலதாரர்களுக்கு ஏலம் முடிவு பெற்ற ஏலக்கேள்வி கூடுதல் தொகை கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட தொகையினை கேட்பு எழுப்பி ஒப்படைப்பு செய்திட மன்ற ஒப்புதலுக்கு,

| வ.எ | பெயர் மற்றும் முகவரி | குத்தகை இனங்கள் விவரம் | ஏலக் கூடுதல் கேட்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | அப்துல் காதர்<br>S/o. பாதுஷா<br>19/1 சீதக்காதி நகர்<br>காயல்பட்டினம் | காயல்பட்டினம் நகராட்சி புதிய பேருந்து நிலையம், கட்டண கழிப்பறை வசூல் செய்யும் உரிமம். | ரூ.77000/- |
| 2 | V. செந்தில் குமார்<br>S/o. வேலப்பன்<br>கீழ லெட்சுமிபுரம்<br>காயல்பட்டினம் | காயல்பட்டினம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமம். | ரூ.1440500/- |
| 3 | ர. ஜோதி லிங்கம்<br>45D, புளியங்குடி தெரு<br>திருச்செந்தூர் | காயல்பட்டினம் நகராட்சி ஆடு மாடு அறுப்புக்கூடம் நடத்தும் உரிமம் . | ரூ.221000/- |
| 4 | சா. நவாஸ் ரஜப்தீன்<br>சாகுல் ஹீமீது<br>142/145A, மரைக்கார் பள்ளி தெரு<br>காயல்பட்டினம் | காயல்பட்டினம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள தென்னை மரங்களின் மேல் மகசூல் அனுபவிக்கும் உரிமம். | ரூ. 4400/- |
| 5 | முஹம்மது இஸ்மாயில்<br>8/24R, பண்டகசாலை<br>காரணர் தெரு<br>காயல்பட்டினம் | காயல்பட்டினம் நகராட்சி கடற்கரை பூங்காவிற்க்கு வரும் வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | ரூ. 62500/- |
| 6 | M.A. நஜிமுதீன்<br>198D, பண்டகசாலை<br>காரணர் தெரு<br>காயல்பட்டினம் | காயல்பட்டினம் நகராட்சி கடற்கரை பூங்காவில் சிறு வியாபாரிகளிடம் வியாபாரம் செய்வதற்கான அனுமதி கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரூ. 100550/- |

ந.க.எண். **706/2015/அ3.**

**தீர்மான எண்.2193 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

**மன்றப்பொருள்: 2**

காயல்பட்டணம் நகராட்சியில் வடகிழக்கு பருவ மழையின் காரணமாக நகராட்சியின் சாலைகள் சேதமடைந்துள்ளதால் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் செல்ல மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன் கருதி கீழ்க்கண்ட சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைத்திட தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ. 93.00 இலட்சத்திற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl. No | Unicode No | Name of the work | Length in Km | Estimate Amount (in Lakhs) |
|---|---|---|---|---|
| 1 | 139006R059 | Improvements to BT Surface at C.Customs road (from high way road Km 0/0 to 0/155) | 0.16 | 3.90 |
| 2 | 139009R094 | Improvements to BT Surface at C.Customs road (from Km 0/155 to Km 0/445) | 0.29 | 7.25 |
| 3 | 139008R078 | Improvements to BT Surface at C.Customs road (from Km 0/445 to Km 0/773.70) | 0.33 | 8.21 |
| 4 | 139011R120 | Improvements to BT Surface at Thayeempalli junction to Periyanesavu street | 0.53 | 13.15 |
| 5 | 139013R198 | Improvements to BT Surface at L.K.Leppaithambi salai | 0.26 | 6.53 |
| 6 | 139014R244 | Improvements to BT Surface at LR Nagar East North 2nd cross street road | 0.08 | 1.90 |
| 7 | 139014R245 | Improvements to BT Surface at LR Nagar East North 3rd cross street road | 0.08 | 1.91 |
| 8 | 139014R247 | Improvements to BT Surface at LR Nagar East Middle street road | 0.11 | 2.50 |
| 9 | 139014R248 | Improvements to BT Surface at LR Nagar East south 1st cross street road | 0.11 | 2.46 |
| 10 | 139014R249 | Improvements to BT Surface at LR Nagar East south 2nd cross street road | 0.11 | 2.48 |
| 11 | 139014R250 | Improvements to BT Surface at LR Nagar East south 3rd cross street road | 0.10 | 2.24 |
| 12 | 139014R251 | Improvements to BT Surface at LR Nagar East south 4th cross street road | 0.15 | 3.47 |
| 13 | 139014R252 | Improvements to BT Surface at LR Nagar east main road from Tailor house | 0.12 | 2.73 |
| 14 | 139018R323 | Improvements to BT Surface at Mahalra colony main road | 0.14 | 3.19 |
| 15 | 139018R324 | Improvements to BT Surface at Mahalra colony Ist street road | 0.14 | 3.34 |
| 16 | 139018R325 | Improvements to BT Surface at Mahalra colony 2nd street road | 0.11 | 2.68 |
| 17 | 139018R326 | Improvements to BT Surface at Mahalra colony 3rd street road | 0.12 | 2.90 |
| 18 | 139018R327 | Improvements to BT Surface at Mahalra colony North street road | 0.10 | 2.28 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | 139018R328 | Improvements to BT Surface at Mahalra colony south street road | 0.06 | 1.43 |
| 20 | 139014R214 | Improvements to BT Surface at New colony 3rd street road | 0.14 | 3.22 |
| 21 | 139014R216 | Improvements to BT Surface at Bass nagar main road | 0.14 | 3.35 |
| 22 | 139014R217 | Improvements to BT Surface at Bass nagar Ist street road from west | 0.15 | 3.47 |
| 23 | 139014R218 | Improvements to BT Surface at Bass nagar 2nd street road from west | 0.12 | 2.83 |
| 24 | 139014R220 | Improvements to BT Surface at Bass nagar 3rd street road from west | 0.24 | 5.57 |
| | | **Total** | **3.87** | **93.00** |

மேற்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீடுகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி (SDRF) 2021-2022ன் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்றிட நகராட்சி நிர்வாக நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பித்திட நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2194 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

மன்றப்பொருள்3

காயல்பட்டணம் நகராட்சியில் வருவாய் பிரிவில் வருவாய் உதவியாளர்களாக அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் நான்கு ஆகும். அதில் தற்போது இரண்டு வருவாய் உதவியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். இந்நகராட்சியில் இரண்டு வருவாய் உதவியாளர் பணியிடங்கள் கடந்த 2012ஆம் வருடத்தில் இருந்து காலியிடமாகவே உள்ளது. எனவே மேற்படி காலியிடங்களை நிர்வாக நலன் கருதியும், வரிவசூல் பணியினை கருதியும் நேரடி நியமனம் முறையில் பூர்த்தி செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், பிரேரனை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கும் வைகப்படுகிறது.

**தீர்மான எண்.2195 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண். 116/2017/அ1

## மன்றப்பொருள் 04

காயல்பட்டணம் நகராட்சியில் வார்டுகளை மறுவரை செய்திட கோரி திரு.வாவூ சம்சுதின் என்பவர் மதுரை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண். 20393/2021ன் சார்பாக தற்போதைய அரசு வழக்கறிஞர் திரு.பி.சுப்பாராஜ், என்பவர் ஆஜராகிய வகைக்கு, வழக்கறிஞர்

கட்டணமாக தொகை ரூ.9500/– னை பொது நிதியில் இருந்து, ஆணையரின் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2196 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**
ந.க.எண். 450/2016/அ2

மன்ற பொருள் 05

காயல்பட்டணம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள பொது சுகாதார, பொறியில் வாகனங்களின் அவசர அவசியம் கருதி பழுது பார்த்த வகைக்கு (இணைப்பில் உள்ள பட்டியல் படி) கீழ்க்கண்ட விவரப்படி இந்நகராட்சி ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளர், பரிந்துரை படி, சில்லறை செலவுகள் மேற்கொண்ட வகைக்கு பொது நிதியில் இருந்து, ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் பெயருக்கு தொகை வழங்க மன்ற அனுமதிக்கு,

| வ.எண் | வாகனங்களின் எண். | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 92 D0051 பொது சுகாதார வாகனம் | 1571–00 |
| 2 | TN 92 D0054 பொது சுகாதார வாகனம் | 5250–00 |
| 3 | TN 92 D 0019 பொது சுகாதார வாகனம் | 4280–00 |
| 4 | TN 92 A6369 | 1800–00 |
| 5 | TN 92 C 6881 | 390–00 |
| | மொத்தம் | 13291–00 |

**தீர்மான எண்.2197 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**
கோப்பு எண். 001/2020/எச்1

மன்றப்பொருள் 06

காயல்பட்டணம் நகராட்சியில் வார்டுகளை மறுவரை செய்திட கோரி திரு.எம்.எஸ்.முகம்மது சாலிஹூ என்பவர் மதுரை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண். 21733/2021ன் சார்பாக தற்போதைய அரசு வழக்கறிஞர் திரு.திலக்குமார் என்பவர் ஆஜராகிய வகைக்கு, வழக்கறிஞர் கட்டணமாக தொகை ரூ.9500/– னை பொது நிதியில் இருந்து, ஆணையரின் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2198 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**
ந.க.எண். 450/2016/அ2

மன்றப்பொருள் 07

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்படி வீடு வீடாக சென்று அபேட் மருந்து தெளிப்பதற்கும் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கையினை 40 தற்காலிக பணியாளர்களைக் கொண்டு, ஒப்பந்த அடிப்படையில் செய்திடவும், அதற்கான ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு அதன் நடைமுறைகள் முடிவுற்று பணிகள் தொடங்கப்படும் வரை உள்ள காலத்திற்கு, ஏற்கனவே இந்நகராட்சியில் திடக்கழிவு மேலான்மையில், உள்ள தனியார் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்ற மெஸ்ஸர்ஸ்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன், நிறுவனம் மூலம் செய்திட மன்ற அனுதியின்படி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போழுது கேவிட்–19 தடப்பு நடவடிக்கை அவசர கால பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், ஒப்பந்த பணிகளுக்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுகிது. எனவே வருகின்ற 3 மாதங்களுக்கு ( ஜனவரி, பிப்ரவரி மார்ச்) தற்போதைய நடவடிக்கைகளை தொடரவும் மற்றும் அதற்கான செலவினங்களை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மேற்கொண்டு தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2199 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண்.720/2014/அ1

மன்றப் பொருள் 08

காயல்பட்டணம் நகராட்சியில் ஈப்பு வாகனம் எண். TN 69 U 9148 ல் பயன்பாட்டில் உள்ளது. நகர்ப்பகுதியில் குடிநீர் பணிகளை கவனித்திடும் பொருட்டும், நகராட்சி பகுதியில் இருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தலைமை நீரேற்று நிலையம் சென்று குடிநீர் பணிகளை பார்வையிட வேண்டியதிருப்பதாலும், குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை சரி செய்திடவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.95000/- னை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2200 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

கோப்பு எண். அ.4/344 / 2011

மன்றப்பொருள் 09

காயல்பட்டணம் நகராட்சியில் தற்போதுள்ள 18 வார்டுகளை 40 வார்டுகளாக மாற்றம் செய்திட கோரி திரு.எஸ்.எஸ்.எம். முகம்மது இஸ்மாயில் என்பவர் மதுரை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண். 20390/2021ன் சார்பாக 13.12.2021 அன்றைய வழக்கு விசாரணைக்கு அரசு வழக்கறிஞர் திரு.திலக்குமார், என்பருடன் கூடுதல் அட்வகேட் ஜெனரல் –3 என்பவரும் ஆஜராகிய வகைக்கு, (கூடுதல் அட்வகேட் ஜெனரல், மதுரை அவர்களின் கடிதம் எண். 344/2021/ AAG-III நாள் 13.12.2021) கட்டணமாக தொகை ரூ.30000 + 5000/– னை பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2201 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

ந.க.எண். 450/2016/அ2

மன்றப்பொருள் 10

காயல்பட்டணம் நகராட்சியில் விதி எண். 15ன் கீழ் அவசர அவசியம் கருதி டிசம்பர் 2021ம் மாதத்திற்கு செலவினங்கள் மேற்கொண்டதற்கும், அதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்.2202 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி